DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 89/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | துரைராஜ் (P.w.8) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1th day of June 2026

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கம்பாளியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 08.11.2020ம் தேதியன்று இரவு 7.00மணியளவில் சுடுகாடு அருகே உள்ள கண்மாய் கரையில் நானும், எனது ஊரைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவரும் பேசிக் கொண்டிருந்தபோது நரிக்குடி போலிசார் அங்கு வந்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் மகாலிங்கம் என்பவரும் கையொப்பம் செய்தோம். (**அந்த பார்வை மகஜர் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

அசா1 ராக்குவின் மகளை எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். அசா1 ராக்கு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் செல்லவில்லை. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் படம் போட்டதை எழுதியுள்ளதாக சொன்னார்கள். எத்தனை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் ஒரே ஒரு பேப்பரில் கையொப்பம் செய்தேன். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றாலும் சரியல்ல. அசா1 ராக்கு எனது சம்பந்தக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.